# 29. சமூக சொத்துக்களைப் பேணுதல்.

உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சமுதாய சொத்துக்களை கண்டறிந்து, அவற்றினை பராமரிப்பதற்கு வரி விதித்தல், சுங்கம் வசூலித்தல் மூலம் ஊராட்சி மன்றங்கள் வருவாயினை பெருக்கி கொள்வதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் அரசாணை நிலை(எண்.) 297, ஊரக வளர்ச்சித் துறை நாள் 29.9.97 மூலம் சமுதாய சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்வோர், சேதம் விளைவிப்போர் மற்றும் தவறாக பயன்படுத்துபவர்களை கண்டறிந்து அவற்றினை பாதுகாத்தல், அச்சொத்துக்களை பதிவு செய்தல், பயன்படுத்துபவர்களிடமிருந்து கட்டணங்கள் வசூலித்தல் ஆகியவற்றினை கண்டறிதல் மற்றும் திட்டமிடல், குத்தகை, விற்பனை, மாற்றம் ஆகியவற்றிற்கான கருத்துரு வழங்குதல், திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையிடல் போன்ற பொறுப்புகளை மூன்று அடுக்கு உள்ளாட்சிகளுக்கு வழங்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இப்பொருள் குறித்து மேலும் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆராய்ந்த இக்குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளை செய்கின்றது.

## கிராம ஊராட்சிகள்.

1. கிராம ஊராட்சியின் ஆளுகையிலுள்ள பல்வேறு சமூகச் சொத்துக்களை கண்டறிந்து முறையான "கிராம ஊராட்சி சொத்துக்கள் பதிவேடு"-ல் பதிவு செய்து பராமரிக்க வேண்டும். இதே போல் அந்த கிராமத்திற்கு சொந்தமான அனைத்து அசையும்/ அசையா சொத்துக்களை ஓர் தனி பதிவேட்டில் பதிவு செய்தல்.

2. பல்வேறு துறைகள் மூலம் கிராம ஊராட்சி பொது சொத்துக்களை உதாரணமாக கட்டிடங்கள், வணிக வளாகங்கள், பொருட்காட்சி இடம், சந்தைகள், பள்ளிக்கட்டிடங்கள் போன்றவற்றை ஒப்படைக்கும் போது அதனை பேணிப் பாதுகாக்க தேவையான " கிராம பொது நிதிக் குழுமத்தை" உருவாக்கி அதில் வரும் வட்டி தொகையைக் கொண்டு சொத்துக்களை பராமரிக்க பயன்படுத்தலாம்.

3. வணிக மற்றும் பிற சொத்துக்களுக்கான வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் நிர்ணயித்தல் மற்றும் வசூலித்தல்.

4. கிராம ஊராட்சி பகுதியிலுள்ள சொத்துக்களை குத்தகைக்குவிட்டு வாடகை வசூலிக்கலாம்.

5. ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள சமூக சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதும், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருப்பதுடன் அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அதற்கான சட்டபடி நடவடிக்கைகள் எடுத்தல்.

6. சமூக சொத்துக்களை மேம்படுத்தவும் பேணிப் பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களையும் நன்கொடையாக பெறுதல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

1. ஊராட்சி ஒன்றியத்தின் சொத்துக்களை கண்டறிந்து அவ்விவரங்களை முறையாக ஊராட்சி ஒன்றிய சொத்து விவர பட்டியலில் பதித்து பராமரிக்கவும் அவற்றை பேணுதலுக்காக மதிப்பீடு செய்து தேவையான பராமரிப்பு நிதியினை திரட்டலாம்.

2. ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்படும் அல்லது சொந்தமான கட்டிடங்கள், வணிக வளாகங்கள், நிலம் பொருட்காட்சி இடம், சந்தைகள் , பள்ளிக்கூடங்கள் போன்றவற்றை பேணிப் பாதுகாக்க தேவையான ""ஊராட்சி ஒன்றிய பொது நிதி குழுமத்தை உருவாக்கி அதில் வருட் வட்டித்

தொகையைக் கட்டிடங்கள் பராமரிக்க பயன்படுத்தலாம்.

3. வணிக மற்றும் பிற சொத்துக்களுக்கான வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயித்து வசூலித்தல் .

4. ஊராட்சி ஒன்றிய சொத்துக்களை , குத்தகைக்குவிடவும் அதற்குரிய வாடகை வசூலிக்கலாம்.

5. சமூகச் சொத்துக்களை தவறாக பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையியடுவதும், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தலும், அவ்வாறு நடந்தால் தேவையான நேரத்தில் அதற்கான சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கலாம்.

6. சமூகச் சொத்துக்களை மேம்படுத்தவும், பேணி பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களை நன்கொடையாகப் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தர்மஸ்தாபனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்.

1. மாவட்ட ஊராட்சியின் சொத்துக்களை கண்டறிந்து அவற்றை "மாவட்ட ஊராட்சி சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்கலாம். மேலும் பராமரிப்பதற்காக அவற்றை மதிப்பீடு செய்து தேவையான பராமரிப்பு நிதியினை பெற ஏற்பாடு செய்தல்.

2. மாவட்ட ஊராட்சிகளுக்கு சொந்தமான கட்டிடங்கள்/ வணிக வளாகங்கள், பொருட்காட்சி இடங்கள், சந்தைகள் போன்றவற்றை கட்டி முடித்து ஒப்படைக்கும்போது அதனை பேணி பாதுகாக்க தேவையான மாவட்ட ஊராட்சி பொது நிதி குழுமத்தை உருவாக்கி அதில் வரும் வட்டித் தொகையைக் கொண்டு சொத்துக்களை பராமரிக்க பயன்படுத்தலாம்.

3. கடந்த ஜில்லா போர்டு கால கட்டத்தில் ஜில்லா போர்டுகளுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் காலப் போக்கில் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவைகளை கண்டறிந்து முறையாக மாவட்ட ஊராட்சி வசம் ஒப்படைக்கலாம்.

4. வணிக மற்றும் இதர சொத்துக்களுக்கான வரி, வாடகை, உபயோகிப்போர் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயித்து, அவற்றை வசூலித்தல்.

5. மாவட்ட அளவிலான சொத்துக்கள், குத்தகைக்கு விட்டு அதற்குண்டான வாடகை வசூலிக்கலாம்.

6. மாவட்ட அளவிலான சமுதாய சொத்துக்களை தவறாக பயன்படுத்தப்படாமல் மேற்பார்வையிடுவதுடன், ஆக்கிரமிப்பு மற்றும் இழப்பீடு ஏற்படாமல் விழிப்போடு இருத்தல் மற்றும் சட்டப்படியான நடவடிக்கை எடுத்தல்.

7. தங்கள் பொறுப்பிலுள்ள சொத்துக்களை மேம்படுத்தவும், பேணி பாதுகாக்கவும் தேவையான நிதி ஆதாரங்களை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பொது மக்களிடம் நன்கொடைகளையும் பெறுதல்.